RECEIVED
1979-12-26
PERIODICALS DIVISION
UNIVERSITY OF SRI LANKA ... LIBRARY

புதுவருட
அன்பளிப்பு

புதுவருட தினத்திற்குள் அண்ணாகோப்பி அரைறாத்தலுக்கு மேல் வாங்குபவர்களுக்கு அழகிய மார்க்கற்றிங் பாக் இலவசமாக வழங்கப்படும்.

அண்ணா தொழிலகம்
நவீனசந்தை, யாழ்ப்பாணம்,
போன்: 7413
நவீன சந்தை, சுன்னாகம்.

★ பக்கங்கள் 12 விலை சதம் 40

# ஈழநாடு
EELANADU

மலர் 21 மார்கழி 11 ஸபர் 6 இதழ் 317
யாழ்ப்பாணம் புதன்கிழமை 26-12-79

நியூ கேம்பிறிட்ஜ்
டியூடோறியல் இன்ஸ்ரிரியூட்
திருநெல்வேலி சந்தி
10-1-80 முதல்
1. Radio & Electronic with Pratical
2. Advanced & Spoken English
3. சுருக்கெழுத்து, தட்டச்சு (ஆங்கிலம்)
4. I. B. K., I. A. A.
விபரங்கட்கு:
V. M. பாக்கியநாதன்

## நீர்கொழும்பில் நேற்று நிகழ்ந்தது

# 42 வீடுகள் முற்றாக எரிந்து சாம்பல்!

(நீர்கொழும்பு)

நத்தார் தினமான நேற்று இங்கு ஏற்பட்ட பெருந் தீ விபத்தில், நாற்பத்திரண்டு வீடுகள் எரிந்து சாம்பலாயின! தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் எதுவும் நிகழவில்லை.

நத்தார் தினக் கொண்டாட்டத்தை யொட்டி அளவுமிக்குமாக கொளுத்தப்பட்ட பட்டாசு வெடிகளிலிருந்து வெளிக்கிளம்பிய தீப்பொறிகளே இக்கோர தீ விபத்துக்குக் காரணமென்று பொலிஸார் நம்புகின்றனர்.

மீனவர்களுக்குச் சொந்தமான வீடுகளே தீயினால் நாசமாகின.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு நேற்றுமாலை விஜயம் செய்து பார்வையிட்ட சமூகசேவை அமைச்சின் செயலாளர் திரு பி ஜி குணசேகரா பாதிக்கப்பட்ட 42 குடும்பங்களையும் பாடசாலையொன்றில் தங்க அனுமதித்து, அவர்களுக்குத் தேவையான உடனடி நிவாரண உதவிகளைக் கவனித்தார்.

இக்குடும்பங்களுக்கு அரசாங்கம் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கும் என்றும், தொழில் புரிவதற்கான பண உதவிகளையும் வழங்கும் என்றும் திரு குணசேகரா தெரிவித்தார்.

## பணயக்கைதிகளுடன் அமெரிக்க மதகுருமார்கள் அளவளாவினர்

(தெஹ்ரான்)

இங்குள்ள அமெரிக்க தூதரகத்தில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் ஐம்பது அமெரிக்க அதிகாரிகளையும் அமெரிக்க கிறிஸ்தவ மதகுருமார்கள் நேற்று சந்தித்து சுமார் ஐந்து மணிநேரம் அளவளாவினர்.

அமெரிக்கத் தூதரகம் இஸ்லாமிய புரட்சி மாணவர்களால் கைப்பற்றப்பட்டு நாலாம் திகதி முற்றுகையிடப்பட்டு, அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டதும் பின்னர் இவர் விடுதலை செய்யப்பட்டதும் தெரிந்ததே.

நத்தார் தினத்தை முன்விட்டு ஈரானிய மதத்தலைவர் அயதுல்லா கொமெய்னியின் அனுமதியுடன் நியூயோர்க்கிலிருந்து இங்கு வந்த நான்கு கிறிஸ்தவ மதகுருமார்களும் நேற்று பணயக் கைதிகளுடன் மனம்விட்டுப்பேசி, நத்தார்ப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

மதகுருமார்களில் ஒருவர் நேற்று பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் பணயக் கைதிகள் அனைவரும் தேகஆரோக்கியத்துடன் இருக்கிறார்கள் என்று கூறினார்.

## பனம் பொருளில் ஜனாதிபதியின் உருவம்

(யாழ்ப்பாணம்)

பனம் பொருட்களினால் தயாரிக்கப்பட்ட ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜயவர்தனவின் உருவம் ஒன்று யாழ் மத்திய கல்லூரியில் பனம்பொருள் அபிவிருத்திச் சபையால் நடாத்தப்படவுள்ள பொருட்காட்சியில் காட்சிக்காக வைக்கப்படும்.

பொருட்காட்சியில் வைக்கப்படும் இவ்வுருவம் பனை ஈர்க்கு, ஓலை, பன்னாடை ஆகியவற்றை உபயோகித்து தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வுருவத்தை அச்சுவேலியைச் சேர்ந்த நெல்லியடி ஒவியர் திரு ... உருவாக்கியுள்ளார். (கே...)

# பஸ் விபத்து மூவர் பலி!

(கேகாலை)

வரக்காப்பொலைக்கருகே நேற்று நிகழ்ந்த கோர பஸ் விபத்தில் மூவர் ஸ்தலத்திலேயே மாண்டனர். முப்பது பேர் கடுமையான காயங்களுடன் அபாயகரமான நிலையில் கேகாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்விபத்து நேற்று காப்பெல - மாவனல்லை வீதியில் நிகழ்ந்தது. விபத்தில் சிக்கியவர்களில் நடத்துனரும் 2 பிரயாணிகளும் ஸ்தலத்தில் உயிர் பிரிந்தனர்!

(கொழும்பு)

இன்று நடைபெறும் பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் ஆய்வரங்கு, கண்காட்சியையொட்டி பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் கௌரவ மாண்புமிகு திரு. செ. இராசதுரை வழங்கியுள்ள செய்தி.



''வடக்கு கிழக்கு மாகாணங்களை அபிவிருத்திசெய்ய பனம் பொருள் அபிவிருத்திச்சபையும் ஒரு பிரதானமான கருவியாகும். பனம்பொருள் அபிவிருத்திக்கு திட்டமிட்ட வேலைகள் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படும். நான் அண்மையில் இந்தியா சென்றபோது அங்கு பனம்பொருள் சம்பந்தமான சில அம்சங்களைத் தெரிந்துகொண்டேன். அவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். இதனைத் தொடர்ந்து பனம்பொருள் அபிவிருத்திச்சபை எனது அமைச்சின் பொறுப்பில் கொண்டுவரப்பட்டுள்ளது. விரைவில் பனம்பொருள் அபிவிருத்தி சம்பந்தமான வேலைகள் ஆரம்பிக்கப்படும். இதன்மூலம் வடமாகாணத்தில் பெருந்தொகையான மக்களுக்கு வேலைவாய்ப்பு கிட்டும். தமிழ்நாடு பனம்பொருட்களை அதிகளவுக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கோடிக்கணக்கான ரூபாயை தேடிக்கொடுக்கின்றது. இதன் காரணமாக இலட்சக்கணக்கானோருக்கு வேலையும் கிட்டியுள்ளது. பனம்பொருள் அபிவிருத்திச்சபையின் அதிகாரிகளை தமிழ்நாட்டிற்கு அனுப்பவும், தமிழகத்திலிருந்து பனை அபிவிருத்தி சம்பந்தமான நிபுணர் திரு க. சம்பந்தனை இலங்கைக்கு அழைத்து யாழ்ப்பாணத்தில் ஆய்வு நடாத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். பனம்பொருள் அபிவிருத்திக்கு என்னால் ஆனமட்டும் பாடுபடுவேன்.

''பனம்பொருள் அபிவிருத்திச்சபையினால் மேற்கொள்ளப்படவிருக்கும் ஆய்வரங்கும், கண்காட்சியும் சிறப்புற எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.''

## பனம்பொருள் அபிவிருத்தி: கருத்தரங்கும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

பனம்பொருள் அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கை, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் இன்று காலை ஆரம்பித்துவைக்கிறார்.

பனம்பொருள் அபிவிருத்திச் சபையினால் நடாத்தப்படும் இக்கருத்தரங்கு இன்று புதன்கிழமையும், நாளை வியாழக்கிழமையும் நடைபெறும்.

கருத்தரங்கைத் தொடர்ந்து நாளை வியாழக்கிழமை பனம்பொருள் பொருட்காட்சியொன்றை யாழ் மாவட்ட அமைச்சர் திரு யூ பி விஜயக்கோன் திறந்துவைப்பார். பொருட்காட்சி 29ம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

உள்ளே...

பனம்பொருள் அபிவிருத்திச் சபை சிறப்புமலர்.

★ புத்தாண்டில் குடும்பத்தவர் அனைவரும் குதூகலித்து மகிழ்ந்திட புதிய நிறுவனம்

கல்யாணி கிறீம் ஹவுஸ்

73. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ஹலோ: 8077

# "இந்திரா ஆட்சியமைத்தால் எமது ஆதரவுகிடைக்காது"

## உத்தியோக காங்கிரஸ் தலைவர் தகவல்

(புதுடில்லி)

திருமதி இந்திராகாந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சி அமைக்குமானால் உத்தியோகபூர்வகாங்கிரஸ் ஒரு போதும் ஆதரவளிக்காது என்று அதன் தலைவர் திரு தேவராஜ் அர்ஸ் அறிவித்துள்ளார். கர்நாடக மாநிலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் இதனைத் தெரிவித்த திரு அர்ஸ் அங்கு தொடர்ந்து சபையில் கூறியதாவது!

### ஜனதாவுடன் உடன்பாடு இல்லை

ஜனதாகட்சித் தலைவர் திரு ஜெகஜீவன்ராமுக்கும் எனக்குமிடையில் இரகசியக் கூட்டு ஏற்பட்டுவிட்டதாக சிலர் பிரசாரஞ்செய்துவருகின்றனர். எமக்கிடையில் எந்த விதமான உறவும் இல்லை என்பதை திட்டவட்டமாக அறிவிக்கின்றேன்.

"ஜனதா மத்தியில் ஆட்சி அமைக்கும்பட்சத்தில் அதற்கு எமது ஆதரவு வழங்குவதா என்பது பற்றி ஆலோசிப்பதற்கு இது சந்தர்ப்பமல்ல. அதுபற்றி தேர்தல் முடிந்த பின்னரே எமது கட்சி அது பற்றி ஆலோசிக்கும்" (கு)

# "நிலையான ஆட்சியமைவதை அ.திமு.க. விரும்பவில்லை

## இந்திராவால் தான் முடியும்" என்கிறார் மூப்பனார்

(சென்னை)

"அ. இ. அ. தி. மு. க. ஜனதாவுடன் உடன்பாடு செய்துகொண்டிருப்பது மத்தியில் நிலையான ஆட்சியமைவதை அ தி மு க விரும்பவில்லை என்பதையே புலப்படுத்துகின்றது"

இவ்வாறு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. கருப்பையா மூப்பனார் தஞ்சாவூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் திரு. மொரார்ஜிதேசாய் நினைத்திருந்தால் ஹரிஜனத் தலைவர் ஜெகஜீவன்ராமை பிரதமராக்கியிருக்கலாம்; ஆனால் அவருக்கு அப்படியான நோக்கமே கிடையாது என்றார்.

"நாட்டை நடத்திச் செல்ல வழிகாட்டி நிலையான ஆட்சி ஒன்றை அமைக்கக்கூடிய ஒரே ஒரு தலைவர் திருமதி இந்திரா காந்தி ஒருவர்தான் என்றும் திரு மூப்பனார் கூறினார். (கு)

## தெல்லிப்பழையில் நாவலர்விழா

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையினரின் ஆதரவில் தெல்லிப்பழை விநாயகர் தேவஸ்தானத்தில் நாவலர் நூற்றாண்டு விழா விமரிசையாக கொண்டாடப்

(11-ம் பக்கம் பார்க்க)

## 'ஈழநாடு' இந்திய தேர்தல் போட்டி

(1) தனிக்கட்சி அரசு / கூட்டரசாங்கம்? ..........................

(2) ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்கள்? ....................

(3) தமிழ்நாட்டில் எக்கட்சி கூடுதல் ஸ்தானங்கள் பெறும்? ....................

(4) புதிய பிரதமர் யார்? ....................

பெயர்: ..........................

விலாசம்: ..........................

கையொப்பம் ...... திகதி ......

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி: தேர்தல் போட்டி "ஈழநாடு", த. பெ: எண்: 49, யாழ்ப்பாணம்.

## கம்பூச்சியாவில்

# பொல் - பொட் ஆட்சியில்

## 20,000 முஸ்லிம்கள் படுகொலை!

(நியூயோர்க்)

"கம்பூச்சிய - பொல்பொட் ஆட்சியின் இனசங்காரக் கொள்கையானது தேசிய சிறுபான்மை இனத்தவர்களை ஏறத்தாழ முற்றாக அழித்தொழித்து விட்டன. இவர்களில் சுமார் ஒன்றரை லட்சம் முஸ்லிம் மக்களும் அடங்குவர்"

இவ்வாறு ஐ.நா பொதுச் சபையில் உத்தியோகபூர்வமான தஸ்தாவேஜாக இங்கு விநியோகிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை கூறுகிறது!

பொல்-பொட் ஆட்சி, பல இனங்களும் வாழும் கம்பூச்சியாவில் ... ஆதாரபூர்வமானது. "ஒரு தேசம், ஒரு மொழி, ஒரு நாடு மாத்திரமே இங்கே உள்ளது. இன்று தொடக்கம் பல தேசிய இனங்கள் கிடையாது" என்று அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து சுமார் 20 தேசிய இனங்களைச் சேர்ந்த மக்கள் அழித்தொழிக்கப்பட்டனர்! இதில் சுமார் (முஸ்லிம்) மக்கள் ... இம்சிக்கப்பட்டனர்.

முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ... ஸலோறு வின் வாக்குமூலத்தின்படி காலை விடியற்காலை தொடக்கம் இரவு 11 மணிவரை ஓய்வொழிச்சலின்றி வேலைசெய்ய கட்டாயப்படுத்தப்பட்டனர். கொலைத்தீர்ப்பு வழங்கப்பட்டவர்கள் கட்டியிழுத்துச் சென்று பெரிய குழிகளில் உயிரோடு புதைக்கப்பட்டனர்."

இவ்வாறாக ஒரு குழியில் 20,000 சுமார் முஸ்லிம்கள் உயிரோடு புதைக்கப்பட்டனர்.

இவ்வாறாக கம்பூச்சியாவின் சுமார் மக்களில் நாலில் மூன்று பகுதியினர் அழித்தொழிக்கப்பட்டனர் என்று அறிக்கை தெரிவிக்கிறது! (கு)

## 9 கோடி 50 லட்சம் ஒதுக்கப்பட்டது

(சென்னை)

தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட கிராமங்களைப் புனரமைக்க தமிழ்நாடு அரசு 9 கோடி 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. (கு)


HAYLEYS

இப்போதோ எந்தத் தொல்லையும் இல்லை...




நானும் ஒரு பிறிக்ஸ் எஞ்சின் வாங்கினேன், வருடம் 365 நாளும் தொல்லையே இல்லாமல் அதைத் தொடர்ந்து பாவிக்கலாம். அது மட்டுமா? வியாபாரியிடம் ஒரு முழு வருட உத்தரவாதமும் அதற்குக் கிடைக்கிறது.


நான் பிறிக்ஸ் எஞ்சின் வாங்கி மூன்று வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. எனக்கும் எந்தத் தொல்லையும் இல்லை. இப்போதும் அது சிறப்பாக வேலை செய்கிறது. பராமரிப்பதும் சுலபம். ஒரு வருடமா? மூன்று அல்லது நான்கு வருடத்துக்கும் நான் அதற்கு உத்தரவாதம் தருவேன். பாவனையும் சிக்கனம். ஒரு மணி நேரம் இயங்க ஒரு போத்தல் மண்ணெண்ணெய் போதும்..



ஒரு கிராமத்தில் உள்ள சாதாரண இரும்புப் பட்டடையில் கூட மிகச் சுலபமாக பிறிக்ஸ் எஞ்சினைப் பழுது பார்த்துக் கொள்ளலாம்.



BRIGGS & STRATTON



மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:
பொறியியல், விற்பனை, சேவைப் பிரிவு,
ஹேலிஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை, கொழும்பு 10.
தொலைபேசி: 96331-6.

HAYLEYS

நடமாடும் பழுதுபார்ப்புச் சேவை வண்டி, தேவையான சகல மாற்றுப்பாகங்களுடனும் கிராமங்களின் ஊடாக அடிக்கடி பயணம் செய்கிறது.




Mel ADS

**RANEE - Jaffna**

Daily 5 Shows at 10-30 a.m. 2-15, 4-45, 7-15 & 9-45 p.m.

Peter Fonda Susan George in

**Dirty Mary Crazy Larry**

(Color)

100-வது வெற்றித் திருநாளை நோக்கி ஓடுகிறுள்!

மனோஹரா யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்

சிவாஜி-சுஜாதா, சந்திரமோகன், கவிதா, நடித்த

**அந்தமான் காதலி**

(வண்ணப்படம்)

100-வது வெற்றித் திருநாள் நோக்கி

ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி காலை 10-30, பி.ப 2-30, 6-15, 9-45

சிவாஜிகணேசன் - சுஜாதா நடித்த (வெள்ளிவிழாச் சித்திரம்)

**தீபம்**

(வர்ணக்கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள் சனி-ஞாயிறு 4 காட்சிகள்

**பாட்டாளியின் சபதம்**

28ந் திகதி முதல் நல்லநேரம்

லிடோ (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 4-30, 7-00 9-30 போன்: 7698

**SUPER COPS**

(More Suited For Adults)

1980- ஜனவரி 1-ம் திகதி புத்தாண்டன்று வெற்றி முழக்கமிடும் 75வது நிறைவு தினத்தைக் கொண்டாடுகிறது

மக்கள் கலைஞர் ஜேம்ஸ்பொண்ட் ஜெய்சங்கரின் 150-வது புரட்சிப்படைப்பு...

சாந்தி யாழ்நகர். போன்: 7642. தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.

**டாக்ஸி ட்ரைவர்**

கண்ணைக் கவரும் உன்னத வண்ணச் சித்திரம்

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 10-30, பி.ப. 2-30 6-00, 9-30

சிவாஜி - ஜெயலலிதா ஜி. வரலட்சுமி நடித்த (புத்தம் புதிய பிரதி)

**தாய்**

ராஜா யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்



நடிப்புக்கு ஈடுஇணை யாருமில்லை என சவால்விட்டு நடிக்கும் சிவாஜி அந்த ஈடு கொடுக்கும் கே. ஆர் விஜயா

சிவாஜி - கே. ஆர். விஜயா மனோரமா தேங்காய் சீனிவாசன் நடிக்கும்

**ஜெனரல் சக்கரவர்த்தி**

(ஈஸ்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்

குடும்பத்துடன் பார்க்கவேண்டிய படம்

வெஸ்லி (மானிப்பாய்) தினசரி: 6-30, 9-30 சனி, ஞாயிறு 3-30

**மர்மயோகி**

நாகம்ஸ் (சுன்னாகம்) தினசரி 6-45, 10-00 சனி, ஞாயிறு 3-45

ரவிச்சந்திரன்-ஜெயலலிதா

**குமரிப்பெண்**

(புதிய பிரதி)

**RIO** Jaffna Phone: 7[illegible]

Daily 4 Shows

CRAZY BOYS ARE BACK in

**Hong Kong With Love**

2வது கிழமைக்குள் வாரம்

**REGAL** Jaffna) Daily at 2-00, 4-30 7-00 & 9-30 p.m.

GENE HACKMAN in

**French Connection ii** (Colour

குறிப்பு: உங்கள் இருதயம் பலவீனமானதா? ஏனெனில் இப்படத்தைப் பார்க்கும் அநேகர் மயக்கம் அடைகிறார்கள்


# பிரான்சிலிருந்து வந்தவர் அன்றே ரயிலுக்குப் பலி!

## 'ஈழநாடு'செய்தி மனைவிக்கு தகவல் தந்ததாம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 22ம் திகதி சனிக்கிழமை இரவு தபால் ரயிலில் நசுங்குண்டு மரணமானசெல்லப்பா கந்தசாமி என்பவரின் மரண விசாரணை 2-வது தடவையாக யாழ் பெரியாஸ்பத்திரியில் நடைபெற்றபோது மரணமானவரின் மனைவி கந்தசாமி தவராசாத்தியை சாட்சியமளித்தார். அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

"எனது கணவர் கொழும்புத்துறையைச் சேர்ந்தவர். ஆறு வருடங்களுக்கு முன் என்னைத் திருமணம் செய்தார். எமக்கு ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் இருக்கின்றனர். நாங்கள் எனது சொந்த ஊரான சுதுமலையில் வசித்துவந்தோம். கடந்த 4 மாதத்திற்கு முன் எனது கணவர் வேலை தேடி பிரான்சுக்குச் சென்றார். விபத்து நடைபெற்ற தினத்தன்று மாலை 6 மணிக்கு வீட்டுக்கு வந்தவர் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான மோதிரத்தையும் 500 ரூபா ரொக்கப்பணத்தையும் என்னிடம் தந்துவிட்டு யாழ்ப்பாணம் போவதாகக் கூறினார். போகும்போது 10 ரூபா நோட்டுக்கள் இவைநிறைந்த சட்டைப்பையின் வைத்துக்கொண்டுபோனார்.

"அன்று முழுவதும் மறுநாளும் எனது கணவர் வீட்டிற்கு வரவில்லை. இதனால் நானும் சகோதரனும் பீதியுற்றுக்கொண்டிருந்தோம். 3ம் நாளான சென்ற திங்கள் காலை 'ஈழநாடு' பத்திரிகையில் வேட்டி, சேட் அணிந்த 35 வயது மதிக்கத்தக்க இனம் தெரியாத நபர் ஒருவர் ரயிலில் மோதுண்டு மரணமானதாகவும், மரணமானவரின் உடல் யாழ் ஆஸ்பத்திரி பிரேத பரிசோதனை அறையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் வெளியான ஒரு செய்தியை வாசித்தேன். இறந்தவர் எனது கணவராக இருக்கலாமென சந்தேகம் கொண்டு எனது சகோதரனுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். பின்னர் யாழ் பொலிஸ் நிலையம் சென்று சார்ஜன்ட் திரு பீற்றர்சிங்கோவுடன் தொடர்பு கொண்டேன். அவர் எனது முறைப்பாட்டைப் பதிவு செய்தார். பின்னர் யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறைக்குச் சென்றோம். சடலத்தை நானும் எனது சகோதரனும் அடையாளம் காட்டினோம்.

[12ம் பக்கம் பார்க்க]

## முஸ்லிம் மாணவர் இனி வேறிடங்களில் அனுமதி

(கொழும்பு)

அடுத்த ஆண்டிலிருந்து யாழ் பல்கலைக்கழகத்திற்கு முஸ்லிம் மாணவர்கள் அனுமதிக்கவேண்டாமென அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாடு விடுத்த வேண்டுகோளுக்கு கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு. நிசங்க விஜயரத்ன இணக்கம் தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களை இனி சம்பந்தப்பட்ட அனுமதிப்பதனும் ஏனைய வேறு பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதனும் முஸ்லிம் கல்வி மகாநாட்டு வேண்டுகோளை ஏற்கனவே ஏற்றுக்கொண்டது தெரிந்ததே. (செ)

## தெள்ளிப்பளை...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

சபைத்தலைவர் பிரமஸ்ரீ கணேசலிங்கக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின் நாவலர் பேச்சுப்போட்டிகளும் இடம் பெற்றன. பின்வருவோர் பரிசில்கள் பெற்றனர்.

கீழ்ப்பிரிவு: மு. கார்த்திகா, மு. அனுஷியா, மத்தியபிரிவு: இ. நந்தினி, சி. மு[illegible], மேற்பிரிவு: வ. வேணி [illegible] இ. தளசிதரன்;


# பிஸ்கால் விற்பனவு

வழக்கு இலக்கம்: 14834,

மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை

முத்து ஆறுமுகம் கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

— வழக்காளி

எதிராக

கணபதிப்பிள்ளை நடராசா தனக்காகவும் பராயமற்ற அவரது பிள்ளைகள் (1) வாஜினி (2) சுபாஜினி (3) புஷ்பராஜா என்பவர்களுக்காகவும்.

— எல்லோரும் கரவெட்டி மேற்கு கரவெட்டி

— எதிராளி

மேற்சொல்லப்பட்ட எதிராளிகள் மேற்சொல்லப்பட்ட இலக்க வழக்கில் 1979ம் ஆண்டு தை மாதம் 17ம் திகதியின் தீர்வையின்படி ரூபா 9150/- இன்னும் 1978-02-21 இலிருந்து 1979-01-17ம் திகதி வரை ரூபா 5000/- மீதான 12% வட்டி ரூபா 550/-ம் 1979-1-17ம் திகதியிலிருந்து 1979-07-17ம் திகதிவரை 9% சட்ட வட்டியும், செலவு ரூபா 751-12½ சகிதத்திற்கும் இதற்காக எதிரிகளுடைய கீழே சொல்லப்படும் ஆதனங்களின் சகல உரித்துக்களையும் பிரயோசனங்களையும் 1980ம் ஆண்டு தை மாதம் 23ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு குறித்த ஆதனத்திலிருந்து பகிரங்கஏலத்தில் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கிறேன்

## விற்பனை செய்யப்படும் ஆதனங்களின் அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சி பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று கரவெட்டி வென்றிக் குறிச்சியிலுள்ள அத்துரு தெற்கு நிலப்பரப்பு 27 எல்லை கிழக்கு அத்துரு கண்ணையாக்கள் கோவிலாதனம், வடக்கு வீரவாகு முதலியார் சிற்றம்பல முதலியாரின் உரிமைக்காரருக்குரிய மறுபேருக்குரியவாதனம், மேற்கு தம்பு பெண் பின்பாசிக்குடையவாதனம், தெற்கு நடைவரம்பு இதடங்கலித் சொரியலாய் தெற்பரப்பு 8 (எட்டு) இவ்வாதனத்தின் ரூபா 4000/- ஐ விக்காத தொகையை அறவிடவேண்டும்.

1970-9-13ம் நொத்தாரிசு வ கு பாலசுப்பிரமணியம் முன்னிலையில் முடித்த 3971ம் இலக்க உறுதியின் காண்பித்த ஆதனங்கள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சி பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று கரவெட்டி குறுவில் குறிச்சியிலுள்ள:

1 தலையாட்டி சிமா நிர 15½ இதில் மேற்கரையாகவுரிய நிபர 7¾ இதில் நடுப்பெறு நாதபதில் இருக்கு பங்கு நிபர. 3 குளி 15¾ இதில் தெற்குப்புறமாக நிபர 3 நீக்கி வடக்குப்புறமாக நிபர 1 குளி 15¾ கடைக் கட்டிடமும் எல்லை கிழக்கும் வடக்கும் பின்னும் காணும் 2ம், 3ம் ஆதனங்கள் மேற்கு ரோட்டு தெற்கு ஒழுங்கை இதடங்கலித் சொரியலாய் அமைவாகியும்,

2 ஷெ தலையாட்டி சிமா நிபர 15½ இதில் கிழக்குப்பக்கமாக அமைவாகிக்க நிபர. 7¾ வடலிகள், வேலிப்பு, கிணறும் எல்லை கிழக்கு கை[illegible]முத்தையும் [illegible] பிள்ளை கந்தரின் உரிமைக்காரருக்குடையவாதனம், வடக்கு குமாரசாமி பெண் இராசம்மாவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம் மேற்கு மேற்குறித்த 1ம் ஆதனமும் ஒழுங்கை முகப்பும் மறு ஆதனமும் தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் வடலிகள் வேலிப்பு கிணறு இவை சகிதம் சொரியலாய் மூன்றிலொரு பங்கில் அமைவாகியும் இதற்கு காணிக்குட்பட்ட கல்வீட்டின் சொரியளாய் அமைவாகியும்.

3 ஷெ தலையாட்டி சிமா நிபர 15 1/2 இதில் மேற்குப்புறமாக அமைவாகிக்குள்ள நிபர 7¾ இதில் வடக்குப்புறமாக என்பதிலொரு பங்கு குளி 1 119/160 எல்லை கிழக்கு மேற்குறித்த 2ம் ஆதனம் வடக்கு சின்னையா சின்னத்தம்பிக்குடையவாதனம் மேற்கு ரோட்டு தெற்கு மேற்குறித்த 1ம் ஆதனம் இதடங்கலித் சொரியலாய் மூன்றிரண்டு பங்கிலமைவாகியும்.

மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை, 1979-12.

க. விஸ்வலிங்கம்
பிஸ்கால்
மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை.

4449

## இஞ்சி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஞாயிற்றுக்கிழமை மதியானம் நானும், எனது மனைவி மக்களும் மாலையில் கிழங்குக்கறி மீன் கறியாகிய வற்றுடன் சோறு உண்டோம். இஞ்சிக்கிழங்கு போட்டு கறிசமைக்கப்படவில்லை. அன்று மாலை மரணமான எனது மகள் கிணற்றடிக்குச் சென்று தண்ணீர் அள்ளிக் கொண்டுவந்தார். தண்ணீருடன் வந்தவர் திடீரென வாந்தி எடுத்தார். பின் மயங்கி விழுந்துவிட்டார். சங்கானை ஆஸ்பத்திரிக்கு மகளைக் கொண்டு சென்றோம். அங்கு யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லும்படி கூறினார். யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம். அங்கு கொண்டுசென்றதும் எனது மகள் புஷ்பலதா மரணமானார்" என்றார்.

சம்பவத்தை பொலிசார் சாட்சியாக ஆஜர்செய்தனர்.

இஞ்சி போட்டுச் சமைத்த மரவள்ளிக்கிழங்கு சாப்பிட்டதால் மரணம் சம்பவித்ததாக மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார். (சொ-அ)

## தேர்தல் செலவை கட்டத்தவறினாராம்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் செலவுகளைக் கட்டத் தவறியதாக கடந்த பொதுத்தேர்தலில் நல்லூர்த் தொகுதியில் போட்டியிட்ட சட்டத்தரணி இராஜராஜேஸ்வரன் தம்பராசா மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் 80-ம் ஆண்டு ஜனவரி 23-ந் திகதி ஆஜராகுமாறு அவருக்கு அழைப்பாணை அனுப்பட்டுள்ளது. (ச-க)

## பிரான்சிஸ்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இறந்தவர் என்னுடன் மிகவும் சந்தோஷமாகவே இருந்தார். அவர் தற்கொலை செய்துகொள்வதற்கு எதுவித காரணமும் இருக்கவில்லை" என்றார்.

மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

சடலம் இறந்தவரின் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் திரு பீற்றர்சிங்கோ சாட்சியை ஆஜர் செய்தார். (சொ-அ)

## இந்திய கோஷ்டிக்கு சோதனை

(கான்பூர்)

நேற்று இங்கு ஆரம்பமான இந்திய-பாகிஸ்தான் நான்காவது கிரிக்கெட் டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, நேற்று 8 விக்கட்டுகளை இழந்து மொத்தம் 112 ஓட்டங்களை எடுத்தது.

கடந்த மூன்று டெஸ்டுகளிலும் சிறப்புடன் விளையாடிய இந்தியக் கோஷ்டியை நேற்றைய ஆட்டத்துடன் அவதானிக்கும் போது கான்பூர், ஒரு பரீட்சையாக இருக்கலாம் என்று கிரிக்கெட் விசிறிகள் கருதுகின்றனர்.

பாரத கோஷ்டியின் நேற்று விளையாடிய கிரிக்கெட் ஆட்டக்காரர்களின் விக்கெட்டுகள் இடைவேளைக்குமுன்னரே ஊளைவெள்ளம் சரிந்தோடத் தொடங்கிவிட்டன!

வெளிச்சமின்மை காரணமாக தேநீர் இடைவேளைக்கு 17 நிமிடங்கள் கழித்து ஆட்டம் நிறுத்தப்பட்டது.


விவசாயிகளே ! விவசாயிகளே !!

இதோ வந்துவிட்டது!

நீங்கள் எதிர்பார்த்த அற்புதமான, சிக்கனமான, சக்திவாய்ந்த, சர்வபூச்சி நாசினி

# பரத்தியன் 6|3

நெல் உருளைக்கிழங்கு,

மிளகாய் வெங்காயம்,

மரக்கறிவகை மற்றும் புகையிலை

ஆகிய எல்லா பயிர்களையும் பாதிக்கும் எல்லா பூச்சி புழுக்களையும் உடனே கட்டுப்படுத்துவதுடன் நீடிய காலம் தங்கும் தன்மையும் தரும்.

தற்பொழுது 450 மிலி லீற்றர், 225 மிலி லீற்றர் போத்தல்களில் கிடைக்கும்.

கிடைக்கும் இடம் :

அக்ரேஸ் லிமிட்டெட்,

56, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்கள் :

ஜெகெம் 39, பிறிஸ்டல் பில்டிங், 51, யோக் வீதி, கொழும்பு-1 தொலைபேசி : 24353


## மரண அறிவித்தல்

### திருமதி. சின்னத்தம்பி நல்லம்மா

திருமதி சின்னத்தம்பி நல்லம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. சின்னத்தம்பியின் அன்புமனைவியும், பிரசித்த நொத்தாரிஸ் திரு.சி. இராசநாயகம், திருமதி தம்பிராசா இராசம்மா திருமதி கனகசபை இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், உடலியடைப்பு திரு க. சி. இரத்தினத்தின் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணியளவில் யாழ்ப்பாணம் அத்தியடி புதுவீதி, 56-ம் இலக்க இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். தகவல்: சி. இராசநாயகம், பிரசித்த நொத்தாரிஸ் அத்தியடி, யாழ்ப்பாணம். 4490


புத்தாண்டில் இதோ ஓர் நற்செய்தி.....

நாகரீகமான சொகுசான பயணத்திற்கு.........

# SUZUKI

★ உங்களுக்கு உல்லாசமான வழிகாட்டுகிறது.........

★ எல்லாவிதமான ரகங்களிலும் உங்கள் தேர்வுக்கு உகந்ததாக......

★ எல்லா வகைகளிலும் உங்கள் மனத்திற்கு திருப்திதருவதாக......

'சுஸுக்கி" மோட்டார் சைக்கிள்கள் இதோ வருகின்றன

உங்கள் தேவையை நிறைவுசெய்ய முந்துங்கள் . . . . உங்களுக்கெனவே இறக்குமதி செய்து விநியோ கிப்பவர்கள்

சி. சின்னத்துரை அன் கொம்பனி

25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

S. Sinnathurai & Co.

25, Stanley Road Jaffna.

தொலைபேசி) PHONE ) 7357



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் மாதம் 26 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No QD/5948/78 The Eelanadu P B No 49, Telegram Eelanadu Phone 389.